பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**30 11 2025** **SUNDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) ''தமிழ்'' இந்தியாவின் பெருமிதம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) பிரதமர் தமது மன் கி பாத் உரையில் தமிழ் மொழியின் பெருமையை எடுத்துரைத்துள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3) சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர்.

4) **Ditwah** புயல் வலுவிழந்து வருவதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5) இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா வெற்றிபெற 350 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

''தமிழ்'' இந்தியாவின் பெருமிதம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சியில் தமிழில் அவர் இக்கருத்தினை பதிவு செய்தார்.

***(Sound Byte — Modi (தமிழ்)-(1) - 12 Sec.)***

தேன் ஏற்றுமதி மூன்று மடங்காக அதிகரித்துள்ளது என்றும் பிரதமர் கூறினார்.

***(Sound Byte — Modi — (3) - 49 Sec.)***

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மன் கி பாத் உரையில் தமிழ் மொழியின் பெருமையை எடுத்துரைத்துள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், காசி தமிழ் சங்கமத்தின் பெருமை குறித்த அம்சங்களும் பிரதமர் உரையில் இடம்பெற்றதாக குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பான பிரதமரின் உரையையும் டாக்டர் எல். முருகன் அதில் பகிர்ந்துள்ளார்.

பிரதமர் ஆற்றிய இந்த உரையில், தமிழகம் தனி சிறப்பிடம் பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், தமது கோவை பயணம் குறித்தும், இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம் குறித்தும் பிரதமர் இந்த உரையில் எடுத்துரைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழை போற்றும் வாக்கியங்களை பிரதமர் தமிழிலேயே கூறிய தருணங்கள் இனிமையாக ஒலித்துக்கொண்டே இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதன்மூலம், பிரதமர் தமிழ் மீது வைத்துள்ள அளவற்ற அன்பை உணர முடிவதாகவும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளுக்கான அட்டவணை மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதன்படி, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை வழங்குவதற்கான கால அவகாசம் வரும் **11-**ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

வரைவு வாக்காளர் பட்டியல் வரும் **16-**ஆம் தேதியும், இறுதி வாக்காளர் பட்டியல் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் **14-**ஆம் தேதியும் வெளியிடப்படுகிறது.

தமிழகம், கேரளா உள்ளிட்ட **9** மாநிலங்கள் மற்றும் **3** யூனியன் பிரதேசங்களில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

<<<<<<>>>>>>

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் **11** பேர் உயிரிழந்தனர்.

இரண்டு அரசு பேருந்துகள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — முருகன் — 30 Sec.)***

<<<<<<>>>>>>

**Ditwah** புயல் வலுவிழந்து வருவதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக இது, வட தமிழகம் மற்றும் புதுவை

கடலோரப்பகுதிகளுக்கு இணையாக வட திசையில் நகர்ந்து வருவதாக தெரிவித்தார்.

*(Voice Byte — செந்தாமரை கண்ணன் - 48 Sec.)*

*( இந்த புயல் காரணமாக அதிகபட்சமாக மயிலாடுதுறை மாவட்டம் திருவெண்காட்டில் 23 சென்டிமீட்டர் அளவுக்கு மழை பெய்துள்ளது.*

*இதுகுறித்த தகவல்களை எமது செய்தியாளரிடம் கேட்கலாம்.*

*வணக்கம், மணிகண்டன் மழை பாதிப்பு குறித்து சொல்லுங்க,*

*(Voice Byte — குருமூர்த்தி மணிகண்டன் — 41 Sec. )*

*உங்கள் தகவலுக்கு நன்றி மணிகண்டன்,*

*இதேபோல், நாகை மாவட்ட மழை பாதிப்பு குறித்த தகவல்களை தருகிறார் எமது செய்தியாளர் செல்வன் ஜெபராஜ்,*

*வணக்கம் செல்வன் ஜெபராஜ், **Ditwah** புயல் காரணமாக நாகை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் மீட்புப்பணிகள் பற்றி சொல்லுங்க,*

*(Voice Byte — செல்வன் ஜெபராஜ் (1) 48 - Sec.)*

*குறிப்பாக பயிர் சேத விவரங்களை சொல்லுங்க,*

*(Voice Byte — செல்வன் ஜெபராஜ் - 46 Sec.)*

*தகவலுக்கு நன்றி செல்வன் ஜெபராஜ் )*

*<<<<<<>>>>>>*

*மாவட்டச் செய்திகள்*

சேலம் மாவட்டம் கொண்டப்ப நாயக்கன்பட்டியில் நியாயவிலைக் கடையை மாநில அமைச்சர் திரு ராஜேந்திரன் இன்று தொடங்கிவைத்தார்.

------------------

நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் உள்ள டாஸ்மாக் கடைகளில் காவல்துறையினர் இன்று சோதனை மேற்கொண்டனர்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் **350** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்துவரும் தென்னாப்பிரிக்கா சற்றுமுன்வரை **7** புள்ளி ஒரு ஓவரில் **3** விக்கெட் இழப்பிற்கு **40** ரன் எடுத்துள்ளது.

ராஞ்சியில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற தென்னாப்பிரிக்கா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட **50** ஓவரில் **8** விக்கெட் இழப்பிற்கு **349** ரன் எடுத்தது.

விராட் கோலி அதிரடியாக ஆடி **120** பந்துகளில் **135** ரன் குவித்தார்.

ரோஹித் சர்மா **57** ரன்னுக்கு ஆட்டமிழந்தார்.

இப்போட்டியில், **3** சிக்சர்களை அடித்ததன் மூலம், ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக சிக்சர்களை அடித்த வீரர் என்ற சாதனையை ரோஹித் சர்மா படைத்தார்.

இதன்மூலம், 351 சிக்சர்களை அடித்த பாகிஸ்தானின் Shahid Afrid-யின் சாதனையையும் ரோஹித் சர்மா முறியடித்தார்.

------------

சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Treesa Jolly — Gayatri Gopichand இணை பட்டம் வென்றது.

<<<<<<END>>>>>>